**செ. கு. எண்:111** **நாள் :23.10.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 23.10.2015

வேலூர் மாவட்டம், அரக்கோணம் கிழக்குப் பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் கம்பியாளராகப் பணி புரிந்து வந்த அன்வர்த்திகான்பேட்டை, கீழ்ஆவதம் பகுதியைச் சேர்ந்த திரு. விநாயகம் என்பவர் 6.6.2015 அன்று இந்திய கப்பற் கடை வளாகம் அருகே மின்மாற்றியில் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், திருமானூர் பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் உதவியாளராகப் (Helper) பணி புரிந்து வந்த திரு. சேகர் அவர்கள் 11.6.2015 அன்று முடிகொண்டான் கிராமத்தில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்தால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஜலகண்டாபுரம் வடக்குப் பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மஸ்தூராகப் பணி புரிந்து வந்த திரு. சரவணன் அவர்கள் 25.6.2015 அன்று தோரமங்கலம் கிராமம், ஜலகண்டாபுரத்தில் மின்கம்பம் நடும் பணியை மேற்கொண்டிருந்த போது, கம்பம் சாய்ந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், மேலத்திருமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாண்டியன் அவர்கள் 26.6.2015 அன்று காளப்பன்பட்டி கிராமத்தில் மின் இணைப்பை பழுதுப் பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் அகால மரணமடைந்த விநாயகம், சேகர், சரவணன் மற்றும் பாண்டியன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**